செ.வெ.எண்:20 நாள்: 07.11.2021

# பத்திரிக்கை செய்தி
## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்கான அறிவுரை

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதை ஒட்டிய இந்திய பெருங்கடலில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 4.5 கி.மீ. உயரம் வரை மேல்காற்று சுழற்சி உள்ளது. அதன் தாக்கத்தின்கீழ் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் நவம்பர் 09.11.2021-இல் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி புயலாக மாற வாய்ப்புள்ளது. இது அடுத்த 48 மணி நேரத்தில் வலுப்பெற்று தமிழக கடற்கரையை நோக்கி வர வாய்ப்புள்ளது. இதன் காரணமாக நவம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் தென்கிழக்கு வங்கக்கடலில் மணிக்கு 40 கி.மீ. முதல் 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

எனவே மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும், கடலுக்கு சென்ற மீனவர்கள் 09.11.2021-க்குள் கரைக்கு திரும்பவும் அறிவுறுத்தப்படுகிறது.

தொடர் மழையின் காரணமாக பெரும்பாலான நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால் பொதுமக்கள் ஆற்றில் குளிக்க செல்வதை தவிர்க்க வேண்டும். தாழ்வான பகுதிகளிலும், நீர்நிலைகளின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். மழை/வெள்ள நீர் தேங்கும் இடங்களில் கால்நடைகளை கட்டி வைக்கக்கூடாது. வெள்ள பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

பொதுமக்கள் தங்களது ஆதார்/குடும்ப அட்டை உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களை நெகிழி உறைகளில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பேரிடர் காலங்களில் பொதுமக்கள் கீழ்க்கண்டுள்ள பொருட்களை முன்னெச்சரிக்கையாக வைத்திருக்க வேண்டுமென மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.**

மெழுகுவர்த்தி மற்றும் தீப்பெட்டி, ஒருவாரக்காலத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் (உணவு வகைகள்), எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய், மருந்து மற்றும் பால் பவுடர், மின் விளக்குகள் மற்றும் உபரி பேட்டரிகள், சுகாதாரத்தை பேணி காக்க தேவையான பொருட்கள், முகக்கவசம் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.

மேற்கண்டுள்ள அறிவுரைகளை பேரிடர் காலங்களில் வலுவாது பின்பற்றுமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் .அ.அருண்தம்புராஜ்,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**